**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 321/2019 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | ஜெகன் |
| Husband Name | : | சுப்பிரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 49 |

**Accused absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.10.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் கருவம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் டெய்லராக வேலை செய்து வருகிறேன். கடந்த 22.07.2016 ம் எனது அண்ணன் தங்கவேலுக்கு குளத்துப்பாளையம் ஆலோபிளாக் கம்பெனி அருகே விபத்து நடந்தது. அன்றைய தினமே விபத்து நடந்தது சம்மந்தமாக போலீசார் திருப்பூர் அரசு மருத்துவனையில் இருந்து என்னையும், ஓர் இரு உறவினர்களையும் சம்பவ இடத்திற்கு அழைத்து வந்தார்கள். போலீசார் அங்கு வரைபடம் வரைந்து விபரம் எழுதினார்கள். அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். **(பார்வை மகஜரில் உள்ள சங்கதிகள் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அதிலுள்ள விவரங்கள் சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பார்வை மகஜரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. விபத்தைப்பற்றி எனக்கு போலீசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடமும் போலீசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். சம்பவதன்று மாலை 05.00 மணியளவில் நானும் எனது உறவினர்கன் அனைவரும் சேர்ந்து வந்து ஊத்துக்குளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். பின்பு போலீசார் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்ததாக சொல்லி காவல் நியைத்தில் வைத்து கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 321/2019 |
| Deposition of Witness | : | PW- 5 |
| Name | : | மூர்த்தி |
| Father Name | : | வேலுசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 45 |

**Accused absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.10.2023.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திருப்பூர் கருவம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் SVS Compacting என்ற பெயரில் நிறுவனம் வைத்துள்ளேன். எதிரி பூவேந்திரன் எனது நிறுவனத்தில் TN 39 7443 என்ற பதிவெண்கொண்ட அசோக் லைலேண்ட் தோஸ்த் வாகனத்தின் ஓட்டுநராக இருந்தார். சுமார் 4-5 வருடத்திற்கு முன்பாக திருப்பூரில் இருந்து கூலிப்பாளையம் நால்ரோட்டிற்கு கம்பெனிக்கு வருவதற்காக எனது மேற்படி வாகனம் வந்துகொண்டிருந்தது. அச்சமயத்தில் எதிரி பூவேந்திரன்தான் அந்த வாகனத்தை ஓட்டினார். அப்போது குளத்துப்பாளையம் அருகே விபத்து ஏற்பட்டதாக ஊத்துக்குளி போலீசார் எனக்கு போன் செய்து சொன்னார்கள்.

2. பூவேந்திரனை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். **(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி அடையாளத்தை பொருத்தவரையில் எந்த ஆட்சபேணையும் தெரிவிக்கப்படவில்லை).** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. விபத்து யாரின் தவறால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லிதான் முதல் விசாரணையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.